1992 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி கேள்வி புவனகிரியைப் பற்றியது. நீங்கள் பொதுவாகக் கேள்வியைக் கேட்கப் போகிறீர்கள் என்பதால் அனுமதித்தேன். பிறகு இராதாபுரத்திற்குப் போனால் எப்படி ? தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 567 திரு. வ. சத்தியமூர்த்தி மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

567—

கால்நடை மருத்துவர்களுக்கு இடர்பாட்டுப்படி.

*5214—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கால்நடை மருத்துவர்களில் ஒரு பிரிவினருக்கு இடர்பாட்டுப் படி (Ri k Allowarce) வழங்கப்படவில்லையெனில் அவர்களுக்கும் இடர்ப்பாட்டுப்படி (Risk Allowarce) வழங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆபத்து மிகுந்த கால்நடை நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் பிரிவுகளில் பணியாற்றும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இடர்பாட்டுப்படி (Risk Allowance) வழங்கப்படுவது போல் மற்ற பிரிவுகளில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்களுக்கும் இடர்பாட்டுப்படி வழங்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும் கால்நடை மருத்துவ அகாரிகள் ஊராட்சி ஒன்றியங்களில் விரிவாக்க அலுவலர்களாக மாற்றுவதற்கு உரிய அதிகாரிகளாக இருக்கிறார்கள். கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறபோது Biloresis, T. B., Worm infection, Viral infection போன்ற கொடிய தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. ஆனால் அந்தக் கொடிய தொற்று நோய்களின் அறிகுறி தெரிவதற்கு சில ஆண்டுகள் கூட ஆகின்றது. ஆகவே மருந்தகத்தில் வேலை செய்கின்ற அதிகாரிகள் விரிவாக்க அதிகாரிகளாக வருகிறபோது இந்த நோய்க்கு உட்பட்டால் எந்த உதவித் தொகையும் அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்பில்லை. ஆகவே விரிவாக்க அலுவலர்களுக்கும் இந்த 'ரிஸ்க் அலவன்ஸ்' வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு இயக்குநர் அனுப்பிய முந்தைய கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டது. இடர் பாட்டுப்படி வழங்குவதை மேலும் பல பிரிவுகளுக்கு நீட்டிக்க வேண்டாம் என ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ளதாலும் அவ்வாறு அனைத்துப் பிரிவுகளுக்கும் இடர்பாட்டுப்படி வழங்க கோருவது நியாயமற்றது என்பதாலும் 1–4–1992 நாளிட்ட அரசுக் கடிதம் மூலம் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 568, திரு. வே. தமிழரசு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

568—

நடமாடும் கால்நடை மருத்துவமனை அமைத்தல்.

*5613— திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூரிலிருந்து அருகிலுள்ள கிராமங்களில் உள்ள கால்நடை பராமரிப்பிற்காக ஒரு நடமாடும் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

(ஆ) இந்த வசதி மலைவாழ் மக்களுக்கும் விரிவாக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதியில் கல்ராயன் மலை, பைத்தூர், தவளப்பட்டி, கீழ்க் கொம்பை, மேல் கொம்பை, போன்ற நாற்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் ஏழை மலைவாழ் மக்கள் பல்லாயிரக்கணக்கான கறவை மாடுகளையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளையும் வளர்த்து ஜீவனம் செய்து வருகிறார்கள். இவைகளுக்கு திடீரென்று கோமாரி போன்ற கொடிய நோய் ஏற்பட்டு விட்டால் பல மாடுகள் ஆடுகள் இறந்து விடுவதால், இந்த

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS